


கடலூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மோடி அரசுக்கு எதிராக மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் வடலூரில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.சிவகுமார் வரவேற்றனார். தலைமை கழக பேச்சாளர்கள் சன்.சங்கர், சோம.செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட கழக துணை செயலாளர்கள் அ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், மேயர் சுந்தரிராஜா, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.




தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசை கண்டித்து மாபெரும் பொதுக்கூட்டம் திருச்சி தெற்கு மாவட்டம் சார்பில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் தமிழக பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. மாநகர செயலாளர் மதிவாணன் வரவேற்றுப் பேசினார். தலைமை கழக பேச்சாளர்கள் தீக்கனல் கருணாநிதி, சாவல்பூண்டி சுந்தரேசன், திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் இனிகோஇருதயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.




தமிழ்நாட்டின் திட்டங்களுக்கு நிதி ஒதுக்காமலும் தமிழ்நாட்டிற்கு புதிய திட்டங்கள் அறிவிக்கமாலும் வஞ்சிக்கும் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க தலைமை கழகத்தின் அறிவிப்பின்படி மாபெரும் பொதுக்கூட்டங்கள் நடைபெற்றது. அதில் சேலம் மேற்கு மாவட்ட தி.மு கழகத்தின் சார்பில் மாவட்ட கழக செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஏற்பாட்டில் கெங்கவல்லியில் நடைபெற்ற மாபெரும் கண்டன பொது கூட்டத்தில் கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. சிறப்புரையாற்றினார். மேலும் தலைமை கழக பேச்சாளர் சென்னை மதிவாணன் கலந்து கொண்டு உரையாற்றினார். இதில் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




ஒன்றிய பட்ஜெட்டில் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடி அரசுக்கு எதிராக சென்னை வடக்கு மாவட்ட கழக சார்பில் நடைபெற்ற கண்டன பொதுக்கூட்டம் மாவட்டப் பொறுப்பளார் ஆர்.டி.சேகர் தலைமையில் நடைபெற்றது. இதில் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார்.



ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கபட்டு வருவதை கண்டித்து, தலைமை கழக அறிவிப்பின்படி நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன பொதுக்கூட்டம், கோத்தகிரி மார்கெட் திடலில் மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக் தலைமையில், தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லைகண்ணன் வரவேற்றார். கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர்கள் கந்திலிகரிகாலன், ஆலந்தூர் க. ஒப்பிலாமணி, ஜே.வீரமணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்டத்திலுள்ள தலைமை கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய – பேரூர் கிளை கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

## தீவுத்திடலில் நடைபெறும் 49 -வது இந்திய சுற்றுலா - தொழில்

# பொருட்காட்சியினை - இதுவரை 2,40,191 பேர் கண்டுகளிப்பு!

### சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பெருமிதம்!



சென்னை, பிப்.9-

தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை 08.02.2025 வரை 2,40,191 பொதுமக்கள் கண்டுகளித்து உள்ளார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அனைவரும் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு “திட்டங்களின் செயல் மாதிரிகளுடன் அரசு துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் சுற்றுலாத்துறை, பொதுப்பணித் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக்கல்வித்துறை, உயர்கல்வித்துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத் துறை, காவல்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்பட பல்வேறு அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களின் 41 அரங்குகளுடன், ஒன்றிய அரசின் சென்னை துறைமுகம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அரங்குகள் உள்பட மொத்தம் 43 அரங்குகள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்காட்சியில் 110 சிறிய கடைகள் மற்றும் 30 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் ஆவின் பால்கோவா, ஆவின் ஐஸ்கிரீம் உள்பட பல்வேறு திண்பண்டங்கள் இந்த பொருட்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், 80,000 சதுர அடி பரப்பளவில் பொழுதுபோக்கு வளாகம் அமைக்கப்பட்டு அதில் 30 க்கும் மேற்பட்ட இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இரயில், பனிக்கட்டி உலகம், அவதார் உலகம், மென் காட்சியகம், மிரளவைக்கும் பேய் வீடு, 3D தியேட்டர், அறிவியல் உலகம் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை அலுவலக நாட்களில் மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும், பொருட்காட்சி நுழைவுச்சீட்டினை வரிசையில் நின்று வாங்க முடியாதவர்களுக்கு வசதியாக டிஜிட்டல் தொழில் நுட்பம் “UPI Payment Methods” மூலம் பணம் செலுத்தி எளிதில் நுழைவுச் சீட்டினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அமைப்பாளர், விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா தலைமையில், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சங்கர் கணேஷ், கிருஷ்ணகுமார், சித்தாலப்பாக்கம் ஜெ.இ.பாண்டியன், ராமாபுரம் ரவி, கோட்டூர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் பகுதி, ஒன்றிய அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் பாலவாக்கம் மனோகரன் தாயார் மு.பட்டம்மாள் மற்றும் வட்டச் செயலாளர்கள் மு.அன்பழகன், சைதை மு.ராசா ஆகியோருக்கு மௌன அஞ்சலி செலுத்தி மற்றும் பல்வேறு கழக பணிகள் மேற்கொள்வது குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றி ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

## மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு தலைமையில்

# சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, பிப்.9-

சென்னை தெற்கு மாவட்ட கலைஇலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் கழகத் தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் தமிழகத்தின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சென்னை தெற்கு மாவட்ட கலைஇலக்கியப் பகுத்தறிப்பேரவை சார்பில் மாவட்ட அமைப்பாளர் எம். எஸ்.ஹரிபாபு தலைமையில், நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சைதாப்பேட்டை, அப்துல்ரசாக் தெருவில் உள்ள எம்.எஸ்.பி.மினி ஹாலில் 07.02.2025 (வெள்ளிக்கிழமை) மாலை 5 மணியளவில் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவையை சார்ந்த மாவட்டதலைவர், மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி தலைவர், பகுதி துணைத்தலைவர், பகுதி அமைப்பாளர்கள், பகுதி துணை அமைப்பாளர்கள், ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தீர்மானம் 1: 15.02.2025 அன்று நடைபெறும் அனைத்து அணிகளுக்கான ஆலோசனை கூட்டத்தில் பெருதிரளராக நமது நிர்வாகிகள் பங்கேற்பது குறித்து,

தீர்மானம் 2: கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மார்ச் 1 பிறந்தநாளை மிக சிறப்பாக கொண்டாடுவது குறித்தும்,

தீர்மானம் 3: சைதை தேரடி திடலில் நடக்கும் அனைத்து கட்சி கூட்டத்தில் நம்முடைய பேரவையை சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பது குறித்து,

தீர்மானம் 4: மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் குருநானக் கல்லூரியில் நடைபெறும் கழக தலைவர் அவர்களின் பிறந்தநாள் நிகழ்ச்சியில் நம்முடைய பேரவையைச் சார்ந்த நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்பது குறித்தும்,

தீர்மானம் 5: சமூகவலைதளத்தில் பேரவையை சார்ந்த நிர்வாகிகள் அனைவரும் சிறப்பாக செயல்படுவது குறித்தும் தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.




சென்னை தெற்கு மாவட்ட கலை இலக்கியப் பகுத்தறிவுப்பேரவை சார்பில் மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட தலைவர், மாவட்ட துணைத் தலைவர், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி தலைவர், பகுதி துணைத் தலைவர், பகுதி அமைப்பாளர், பகுதி துணை அமைப்பாளர்கள், ஆகியோர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.